

திருவண்ணாமலை, மலைவலபாதையில் அமைந்துள்ள கலைஞர் சிலை அருகில், பௌர்ணமிக்கு வருகை தந்த ஆன்மிக பெருமக்களுக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் அறுசுவை உணவுகளை வழங்கினார். உடன் இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், ஏ.ஏ.ஆறுமுகம், சு.விஜயராஜ், குட்டி க.புகழேந்தி, ந.சீனுவாசன், சி.சண்முகம் உட்பட பலர் உள்ளனர்.




கோவை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர் இரா.தனபால் தலைமையில் துணை அமைப்பாளர்கள் லாரா பிரேம் தேவ், கோவை அருண்குமார், துரை பிரவீன் குமார் ஆகியோரது முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் – செம்மொழி நாயகர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# கோவை தெற்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடுவீர்!

## மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் அறிக்கை!



கோவை, ஜூன்.1-

முத்தமிழ் அறிஞர் செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களது பிறந்தநாள் விழா ஜூன் 3 ம் தேதி கோவை தெற்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அறிக்கை வருமாறு : -

தங்கச் சூரியன் உதிக்கும் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே, “என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே” எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே, பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பல லட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே, சட்டங்கள் பல இயற்றி, திட்டங்கள் பல தீட்டி தமிழ்நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே, இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர், இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர், உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் ‘தமிழினத் தலைவர்’ கலைஞர்,

அய்யன் திருவள்ளுவருக்கு தேர் வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே உங்கள் பிறந்த நாளில் வணங்குகின்றோம்.

கோவை தெற்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாட கொண்டாடிடும் வகையில் சூலூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கழக, கிளைக் கழகங்கள் தோறும் கலைஞரின் திருவுருவச் சிலைக்கும், சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி கழக கொடி ஏற்றி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள், எழுது பொருட்கள் வழங்கியும், முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், பார்வையற்றோர் இல்லங்கள், மாணவர் விடுதிகள், கருணை இல்லங்கள், பெண்கள் காப்பகங்கள், மனநல காப்பகம், பார்வையற்றோர் இல்லம் போன்ற இடங்களில் காலை, மதியம், இரவு உணவுகள் வழங்கியும், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, புத்தாடை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இலவச கண் மருத்துவ சிகிச்சை முகாம், இரத்த தான முகாம்கள் சிறப்பாக நடத்தி வேண்டுமாய் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

அதுசமயம், நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், BLA 2, BLC பாக முகவர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் அவர்கள் சார்ந்த பகுதிகளில் தவறாமல் கலந்து கொண்டு செம்மொழி நாயகர் கலைஞரின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நவீன தமிழ்நாட்டின் சிற்பி – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை

# தூத்துக்குடி வடக்கு மாவட்டம் முழுதும் நல உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருமதி. பி.கீதா ஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, ஜூன்.1-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.கழகத்தின் பல்வேறு அமைப்புகள் சார்பில் கொண்டாடுவது குறித்து மாவட்டக் கழக செயலாளர் திருமதி. பி. கீதாஜீவன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது:-

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் கிளைக்கழக அமைப்புகள் தோறும் ஜூன் - 3 ஆம் தேதி கலைஞர் அவர்கள் திருவுருவப்படத்திற்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தியும், கழக கொள்கை விளக்கப் பாடல்களை ஒலிபரப்பச் செய்தும், தி.மு.க. கொடியேற்றியும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், ஆதரவற்றோர் இல்லங்களுக்கு உணவு வழங்கியும், கழக நிர்வாகிகள் கொண்டாடிட வேண்டும்.

நாட்டிலேயே கணினி கல்வியை தமிழ்நாட்டில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியது, தமிழ்நாட்டில் அனைத்து தரப்பினருக்குமான திட்டங்களை தந்து தமிழ்நாட்டை வளர்ச்சியடைய செய்தது, தமிழ்நாடு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட பல்வேறு திட்டங்களை தந்தது, தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வாங்கி தந்தது முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார்.

இந்தியாவிலேயே முதல் முறையாக ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சொத்தில் சம உரிமைச் சட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், காவல்துறை ஆணையம் அமைத்து பெண்களை காவல்துறையில் பணியமர்த்தியது, அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு, பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஏழை எளிய மக்களின் கண்ணியமான வாழ்விடத்திற்காக குடிசை மாற்று வாரியம், சமத்துவபுரம், கலைஞர் வீடுகள் திட்டம் என எண்ணற்ற பல முன்னோடித் திட்டங்களை தமிழ்நாட்டிற்குத் தந்து சமூகநீதியையும், சமத்துவத்தையும் நிலைநாட்டிய “நவீன தமிழகத்தின் சிற்பி” என போற்றப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை மக்கள் பயனுற கொண்டாடும் வகையில், தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, மற்றும் பேரூர் கழகங்கள் சார்பில் வெகு சிறப்பாக அனைவரும் கொண்டாட வேண்டும்.

இந்த நிகழ்ச்சிகளில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், கழக தொண்டர்கள், சார்பு அணி நிர்வாகிகள், செயல் வீரர்கள், இளைஞரணியினர் திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருமதி. பி.கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103ஆவது பிறந்தநாள் விழா! ஜூன்-3 அன்று

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் ஊர் கிளை, உட்கிளைதோறும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி வேண்டுகோள்!



இராணிபேட்டை,ஜூன். 1-

இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தங்கச் சூரியன் உதிக்கும் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே,

“என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே” எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே,

பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பல லட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே,

சட்டங்கள் பல இயற்றி, திட்டங்கள் பல தீட்டி தமிழ்நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே,

அய்யன் வள்ளுவருக்கு தேர் வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே,

உங்கள் பிறந்த நாளில் நின்னை வணங்குகின்றோம்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், சமூக நீதி கொள்கைக்கும், மிகப் பெரிய பங்காற்றிய தலைவர். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்கிய சட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், சமத்துவபுரம் திட்டம், உழவர் சந்தை, தமிழ் மொழிக்கான செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்தது, மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஏழை மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் உள்ளிட்ட எண்ணற்ற சாதனைகளை தமிழகத்திற்கு வழங்கியவர் கலைஞர்.

எனவே அவரது பிறந்த நாள் விழாவை மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட கழகத்தின் அனைத்து அணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள் அவரவர் பகுதியில் பங்கேற்று இருவண்ணக் கழக கொடி உயர்த்தி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு, நலத்திட்டங்கள் வழங்கி மற்றும் மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகம், எழுது பொருட்கள் வழங்கி கண்தானம், இரத்த தானம், அன்னதானம் ஆகிய நிகழ்ச்சிகளை சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், வட்ட கிளை, உட்கிளை, ஊர் கிளை செயலாளர்கள் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் விழாவை

# விழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும்!

## மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிவிப்பு!



செஞ்சி, ஜூன். 1-

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் விழாவை விழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும் எனசெஞ்சியில் நடைபெற்ற மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றினர். விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றி னார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார். மாவட்டப் பொருளாளர் ரமணன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப் பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். அப்போது அவர் பேசுகையில்:

நம்முடைய அன்புத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 அன்று 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகள் முழுவதும் ஒன்றியம், நகரம், பேரூர் களிலும் அனைத்து ஊராட்சி கிளைகளிலும் நகர பேரூர் வார்டுகளிலும் கழக இருவண்ண கொடி தோரணங்களைக் கட்டி முத்தமிழ் அறிஞர் கலைஞர், தலைவர் தளபதி ஆகியோர் புகழ் பரப்பும் பாடல்களையும் அவர்கள் உரை யாற்றிய எழுச்சியான பேச்சுகளையும் ஒளி பரப்பி அந்தந்த கிளைகளில் உள்ள கழக முன்னோடிகளை முன்னிலைப்படுத்தி கழகத்தின் இரு வண்ணக் கொடியை ஏற்றி பொது மக்களுக்கு இனிப்புகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்றும், மேலும்ரத்ததான முகாம், மருத்துவ முகாம், கண் சிகிச்சை முகாம்கள் நடத்துதல், மரக்கன்றுகளை நடுதல், ஏழை எளிய மக்களுக்கு வேட்டி சேலை வழங்குதல், ஏழை எளிய பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரண பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத்திட்ட உதவிகளை சிறப்பான முறையில் வழங்க வேண்டும் என்றும், விழுப்புரம் வடக்கு மாவட்டமே விழாக்கோலம் காணுகின்ற வகையில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை மிகவும் பிரம்மாண்ட முறையில் ஆண்டு முழுவதும் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும் எனவிழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், சாந்தி சுப்ரமணியன், நாராயணமூர்த்தி, அண்ணாதுரை, மொடையூர் துரை, இளம்வழுதி. மணிமாறன், செழியன், சொக்கலிங்கம், ராஜாராமன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, துணை சேர்மன் ஜெயபாலன், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினர்.



நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் பகுதி பகுதியாகச் சென்று வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.உடன் மேயர்.கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு,பொதுக்குழு உறுப்பினர் நடராஜன் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் மத்திய ஒன்றியம் நன்னாடு ஊராட்சியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.